காலை 6.30 மணி முதல் இரவு 9 மணி வரை

# மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகிறது

## 50 சதவீத இருக்கைகளில் அமர்ந்து பயணிக்க அனுமதி

சென்னை, ஜூன்.21-

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைப்பிடிக்கப்பட்ட பொதுமுடக்கத்தால் சென்னை மெட்ரோ ரெயில் சேவைகள் கடந்த மே மாதம் 10-ந் தேதி முதல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டன. தற்போது தமிழக அரசு தளர்வுகளை அறிவித்ததை தொடர்ந்து சென்னை மெட்ரோ ரெயில் சேவைகள் இன்று (திங்கட்கிழமை) முதல் இயக்கப்படுகிறது. இன்று காலை 6.30 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும் ரெயில்களில் 50 சதவிகித இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள். காலை 9 மணி முதல் 11 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை அலுவலக நேரங்களில் 5 நிமிட இடைவெளியிலும், மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் ரெயில்கள் இயக்கப்படுகிறது.

பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது. ரெயில் நிலைய நடைமேடைகளில் பயணிகளின் வருகை, வெளியேறுதல் மற்றும் தனி மனித இடைவெளியை கண்காணிப்பதற்காக ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பயணிக்கும்போதும், காத்திருக்கும் போதும் கட்டாயம் முக கவசம் அணிய வேண்டும். அத்துடன் 6 அடி தூர இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். தனிமனித இடைவெளியை குறிக்கும் வகையில் எக்ஸ் குறியீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை பயணிகள் பின்பற்ற வேண்டும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.